## சிவகங்கை, செயற்பொறியாளர்(வே.பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்
### பிறப்பிப்பவர்: திரு.வ.இளங்கோவன்,பிஇ.(விவ.)

செ.மு.ஆ.எண்: ஆ/565/2019(1) நாள்:20.01.2020

**பொருள்:** பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் - தொகுதி 4ல் அடங்கிய பணிகள் - நேரடி போட்டித் தேர்வு - 2015-2016, 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் (பிணையம் அற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மைத் துறை மூலம் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் - இவ்வலுவலக இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) திருமதி.மா.தனலட்சுமி- அவர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை :**

1) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடித எண்.1012/PSD-G2 /2019, நாள்:20.02.2019 மற்றும் 27.02.2019
2) சென்னை-5 வேளாண்மை இயக்குநர், அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (ப.மே), அவர்களின் செயல் முறை ஆணை எண். அநிபி5/139388/2018, நாள்: 05.03.2019
3) தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களின் செயல் முறை ஆணை எண்.அப2/8448/2019,நாள்:08.03.2019
4) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.ஆ/565/2019,(1) நாள்:15.03.2019
5) வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம். சென்னை-5, அவர்களின் கடித.எண். அபபி3/23567/2019, நாள்: 20.07.2019
6) வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம் சென்னை-5, அவர்களின் கடித.எண். அபபி3/95057/2019, நாள்: 02.08.2019
7) தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களின் கடித.எண். அப2/8448/2019, நாள்:14.03.2019
8) வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம். சென்னை-5, அவர்களின் கடித.எண். அபபி3/23567/2019, நாள்: 04.11.2019

-------------

ஆணை:-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் 2015-2016, 2016-17 மற்றும் 2017-18-ஆம் ஆண்டு நேரடிப் போட்டித்தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை (2)-இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை-3 இல் காணும் செயல்முறை ஆணைகளின்படி சிவகங்கை, செயற்பொறியாளர் (வே.பொ)-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (4)-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, **திருமதி.மா.தனலட்சுமி** அவர்களுக்கு சிவகங்கை, செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) பதவியில் ரூ.19500-62000(Level 8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக அடிப்படையில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் 18.03.2019 முற்பகல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் ஆகப் பணியேற்றுக்கொண்டார்.

-2-

பார்வை (6)-இல் காணும் வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி, தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு பணிபுரிந்துவருபவர்களின் பணியினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்திட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை எண்.191 பொதுத்துறை நாள்:01.02.1962-இல் தேர்வாணையம் மூலம் பணி அமர்த்தப்பட்டவர்களுக்கு பணிவரன்முறை செய்வதற்கு ஓராண்டு கழிய வேண்டும் என்ற நிர்பந்தம் இல்லை எனவும், பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில் இவ்வலுவலகத்தில் பணிபுரியும் திருமதி.மா.தனலட்சுமி, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) அவர்களுக்கு, தனியர் பணியேற்ற நாள்:18.03.2019 முற்பகல் முதல் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

"This regularization is subject to the outcome of WP's pending on the files of the Hon'ble High Court of Madras/ Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil service's Examination Group – IV for the year 2015-2016, 2016-17 and 2017-18 recruitment"

மேலும் இவர் இப்பதவியில் மூன்றாண்டு கால தொடர்பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண்பருவம் முடிக்க வேண்டும் எனவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

செயற்பொறியாளர்(வே.பொ),
சிவகங்கை.

20/01/2020

பெறுநர்,
திருமதி.மா.தனலட்சுமி,
இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)
இவ்வலுவலகம்

நகல்: வேளாண்மை இணை இயக்குநர், சிவகங்கை
நகல்: தலைமைப் பொறியாளர்(வே.பொ.), சென்னை
நகல்: கண்காணிப்புப் பொறியாளர்(வே.பொ),விருதுநகர்
} அவர்களுக்கு தகவலுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: பட்டியல் பிரிவு இவ்வலுவலகம்.

நகல்: பணிப்பதிவேடு / இருப்பு கோப்பு / உபரி